தேவன் கண்ட மனிதர்கள்

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

அப்பொழுது அவன்: நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய்மொழியைக் கேட்கவும், அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார். நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய். இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான். பின்பு நான் எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து, அவரைத் தரிசித்தேன். அப்போஸ்தலர் 22:14-17

மகத்துவத்தையும், மகிமையையும் வெளிப்படுத்தும் தேவன்

ஆண்டவரைக் கண்ட மனிதர்கள் இவ்வுலகில் ஏராளம் பேர் உண்டு. இந்நாட்களில், ஆண்டவரை உபயோகப்படுத்தி செய்யும் ஊழியர்களும் உண்டு; ஆண்டவரால் உபயோகப்படுத்தப்படும் ஊழியர்களும் உண்டு. தேவனைக் கண்ட மனிதர்களையும், தேவன் கண்ட மனிதர்களையும் நாம் உற்றுநோக்கவோமென்றால் சில சத்தியங்களை நாம் புரிந்துகொள்ளமுடியும். இந்த இரண்டுவித கூட்டத்தாரில், இரண்டாவது கூட்டத்தினர் சற்று விசேஷித்தவர்கள். பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய். கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால், அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக. அவன் துஷ்டமனுஷனாயிருப்பான். அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும். தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான் என்றார். அப்பொழுது அவள்: என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கின்ற தேவன் என்று பேரிட்டாள் (ஆதி 16:11-13). ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம் கொடுத்தபோது, அது நிறைவேறுமோ அல்லது நிறைவேறாதோ என்று சந்தேகம் கொண்ட சாராள், அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும்படி தான் உதவிசெய்கிறதைப்போன்ற பாவனையிலே ஆபிரகாமுக்கு ஆகாரைக் கொடுத்தாள். ஆகார் கர்ப்பவதியானபோது, யார் தன்னை உயர்த்தினார்களோ, யார் தனக்கு ஸ்தானத்தை விட்டுக்கொடுத்தார்களோ, யார் தனது வாழ்க்கையில் திருப்பத்தைக் கொண்டுவந்தார்களோ, யார் தன்னை முக்கியமாக மாற்றினாரோ அதையெல்லாம் மறந்துவிட்டு, நன்றிகெட்டவளாக தனது நாச்சியாரை அர்ப்பமாக நினைக்கத் தொடங்கினாள். அதனாலேயே சாராளுக்கு மிகுந்த துக்கம் உண்டாயிற்று. அந்த துக்கத்தினாலேயே சாராள் ஆபிரகாமினிடத்தில் சென்று, நான் நன்மை செய்தேன், நம்முடைய குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகுமென்றும், ஆசீர்வாதம் உண்டாகுமென்றும் எண்ணி இந்தக் காரியத்தைச் செய்தேன். ஆனால், எனக்கு உண்டாயிருக்கும் தீமையை நீர்தான் அகற்றவேண்டும் என்று முறையிட்டாள். ‘நீ ஆகாரை உன் இஷ்டப்படி நடத்து’ என்று சாராளுக்கு ஆபிரகாம் அனுமதியளித்தபோது, தன்னை அர்ப்பமாக நினைத்த ஆகாரை சாராள் பாடுபடுத்தவும், அழுத்தவும், ஒடுக்கவும் தொடங்குகின்றாள். பாடுகளையும், நெருக்கங்ளையும் தாங்கமுடியாத ஆகார் அந்த இடத்தை விட்டே ஓடுகின்றாள். எங்கே போகிறேன்

என்றும், எப்படி வாழுவேன் என்றும், யார் என்னை ஆதரிப்பார் என்றும் தெரியாதவளாக நொறுக்கப்பட்டவளாக, அநாதையாக வனாந்தரத்தில் ஓடுகின்ற வேளையில் தேவனுடைய தூதன் அவளுக்கு எதிர்ப்பட்டார்.

தேவன் சகலத்திலேயும் வியாபித்திருக்கக்கூடியவர். அவரது மகிமையும், மாட்சிமையும் முழு உலகத்தையும் ஆட்கொண்டிருக்கிறது. இதை நாம் அநேக நேரங்களில் உணர்ந்துகொள்ளுவதில்லை. **ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள் (ஏசாயா 6:3).** தேவனுடைய வல்லமை எல்லா நேரங்களிலேயும் இந்த பூமியை நிரப்பிக்கொண்டேதான் இருக்கிறது. ஆனால், நாம் எப்போது இதைக்காணமுடியும்? தள்ளப்பட்ட நேரத்தில், ஒடுக்கப்பட்ட வேளையில், கைவிடப்பட்ட சூழ்நிலையில், கவலையுடனிருக்கும் நிலைமையிலேயே நாம் தேவனுடை மகிமையினைக் காணுகின்றவர்களாக மாறுகின்றோம். நம்மில் அநேகர் துன்பமான வேளையினாலேயே தேவனண்டை கிட்டிச்சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றோம். ஒரு இந்து சகோதரி என்னிடத்தில் வந்து, 'நான் வைராக்கியமான இந்துக்குடும்பத்தைச் சேர்ந்தவள், பன்னிரெண்டு பிள்ளைகளுக்குத் தாய் என்றபோதிலும், எனது ஒரு மகளின் மரணத்திநிமித்தமே நாங்கள் இயேசுவண்டை வந்தோம்' என்று சாட்சி சொன்னார். வியாதி வந்திருக்காவிடில், கடன் பிரச்சனை வந்திருக்காவிட்டால், தற்கொலை செய்துகொள்ளும் இக்கட்டான சூழ்நிலை உருவாகியிருக்காவிட்டால், அலுவலகத்தில் நெருக்கம் உண்டாயிருக்காவிட்டால் அநேகர் ஆண்டவரண்டை வந்திருக்கமாட்டார்கள். நாம் தள்ளப்பட்டதினாலேயே பூமியனைத்தும் நிறைந்திருக்கின்ற தேவனை நமது கண்கள் கண்டது. தேவனது மகிமையைக் காணும்படியாக நாம் தள்ளப்பட்டதும், நமக்கு வந்த போராட்டங்களும் நன்மையானவைகளே.

சராள் எப்படிப்பட்டவள்? தொன்னூறு வயது பாட்டியாக அவள் இருந்தபோதிலும், வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தபோது மூன்றுபடி மாவினை எடுத்து அப்பமாகச் சுடுவதற்கு அவள் ஆயத்தமுடையவளாக இருந்தாள். முன்னூற்று பதினெட்டு யுத்தம் பண்ணக்கூடிய வேலைக்காரர்கள் தனது வீட்டிலே இருந்தபோதிலும், முன்பின் அறியாதவர்கள் தனது வீட்டிற்கு வந்திருந்தபோது, அவர்களுக்கு சந்தோஷமாக பணிவிடை செய்தாள். தன்னை ஆகார் காணவேண்டும் என்பதற்காகவே தேவன் சூழ்நிலைகளை மாற்றுகின்றார். அநேக நேரங்களில் நாம் பூமிக்கடுத்தவைகளையே குறித்து யோசித்து, தேவனுடைய மகத்துவத்தை, வல்லமையை, பிரசன்னத்தை, மாட்சிமையை, ஆளுகையைக் காணமுடியாதபடிக்கு மறந்தவர்களாக ஜீவிக்கின்ற நேரத்திலே, நம்முடைய சூழ்நிலைகளிலே கடினமான நிலை உண்டாகின்றது. ஒடுங்கிப்போன, ஒடுக்கப்பட்ட, இனி எங்கே போவேன் என்ற சூழ்நிலைகளிலே, வனாந்தரத்திலே நாம் நடந்துகொண்டிருப்போமென்றால். ஆனாலும், இவைகள் நம்முடைய வாழ்க்கையில் தேவனால் அனுமதிக்கப்பட்டவைகளே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நம்முடைய பாடுகளில், துன்பங்களில், கடினமான சூழ்நிலைகளில் தமது மகிமையைக் காணப்பண்ணுகின்ற தேவன் நமக்கு உண்டு. இந்த உண்மையை நாம் அறிந்துவைத்திருப்போமென்றால் துன்பங்களைக் கண்டு நாம் சவால் விட முடியும்.

ஆதிக்கிறிஸ்தவர்கள் சிங்கங்களின் குகைகளிலே போடப்பட்டார்கள். ரோமாபுரியிலே விளக்குத் தூண்களிலே அவர்கள் கட்டப்பட்டதோடு மாத்திரமல்ல, அப்படியே எரிக்கவும் பட்டார்கள். அவர்கள் எரிக்கப்படும்போது செய்த முழக்கம் 'தேவனிடத்தில் செல்வதற்கு சீக்கிரத்தில் வழிதிறந்த நீரோ வாழ்க' என்பதே. இந்த முழக்கம் நீரோ மன்னனைப் பைத்தியம் பிடிக்கச் செய்தது. நீரோ மன்னனின் காலத்திலேயே அதிக உபத்திரவங்கள் காணப்பட்டது. நம்மை ஒடுக்குகிறவர்களுக்கே பைத்தியம் பிடிக்கும், நமக்கு அல்ல. நம்மைக் காண்பவரை நம்முடைய கண்கள் கண்டுவிட்டால் துன்பங்களும், பாடுகளும், உபத்திரவங்களும் நமக்கு சகிப்பதற்கு எளிதாகிவிடும். நாம் பெலனில்லாதவர்களல்ல, கோழைகளல்ல. துன்பங்களும், நெருக்கங்களும், பாடுகளும் தேவனை நாம்

கண்டுகொள்வதற்கு உபயோகப்படுத்துகின்ற கருவிகள் என்பதை நாம் உணர்ந்துகொள்வோமென்றால் நாம் அசைக்கப்படுவதில்லை.

பரிசுத்தப்படுத்தும் தேவன்

> அப்பொழுது யாக்கோபு: நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி, அந்த ஸ்தலத்துக்கு பெனியேல் என்று பேரிட்டான். அவன் பெனியேலைக் கடந்துபோகையில், சூரியன் உதயமாயிற்று. அவன் தொடைச்சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடந்தான். ஆதி 32:30,31

தேவனை மனிதன் முகமுகமாகக் காணும்போது, 'தேவனைக் கண்டேன், தேவனைக் கண்டேன்' என்று ஆர்ப்பரிக்கின்றான். பெத்தேல் என்னுமிடத்தில் யாக்கோபு வந்தபோது, சூரியன் அஸதமித்தது. தாயின் அரவணைப்பை விட்டுவிட்டு, தகப்பனின் ஆசீர்வாதத்தை இழந்தவனைப்போலக் காணப்படுகின்ற யாக்போபு தன்னந்தனியனாக அலையவேண்டிய நிலை உருவானது. கல்லைத் தலையணையாக வைத்து தூங்கிக்கொண்டிருந்த நேரத்தில் அவன் ஒரு சொப்பனத்தைக் கண்டான். 'நீர் எனக்கு எல்லாவற்றையும் செய்தால், நான் உமக்குத் தசமபாகம் கொடுக்கிறேன்' என்று சொப்பனத்திலேயே கர்த்தருடன் பேசுகின்றான். ஆனால், யாக்கோபு தசமபாகம் கொடுத்ததாக நாம் வேதத்தில் காணமுடிவதில்லை. மாமாவின் வீட்டிற்கு யாக்போபு சென்றபோதும் 'ஆட்டுக்குட்டிகளை எப்படி பெருக்குவது' என்று சொப்பனத்திலேயே தேவதூதன் அவனுக்குக் கற்றுக்கொடுத்தான். யாக்கோபு தேவனை அதுவரை முகமுகமாய்க் காணவில்லை. தேவன் யாக்கோபை மறுபடியும் அவனது சொந்த பூமிக்கே வரச்செய்கின்றார். அப்போதும் தேவனைக் காணவேண்டும் என்ற ஆவல் அவனுக்குள் காணப்படவில்லை. ஆனால், ஆபிரகாமிற்கோ தேவனைக் காணவேண்டும் என்ற வாஞ்சை உள்ளத்தில் காணப்பட்டது. எனவே 'ஆபிரகாம் அந்த நாளைக் கண்டு களிகூற ஆசையாயிருந்தான், மகிழ்ந்தான்' என்று இயேசு கூறுகின்றார். ஆனால், யாக்கோபுக்கோ அந்த வாஞ்சை இல்லாதிருந்தது.. ஆனால், 'ஏசா வருகின்றான்' என்று கேள்விப்பட்டபோதோ 'ஆண்டவரை நீர் என்னை ஆசீர்வதியும்' என்று அவரைப் பற்றிக்கொண்டான். நான்கு மனைவிகள், பன்னிரெண்டு பிள்ளைகள் இருந்தபோதிலும் இரவில் ஆடுகளின் நடுவிலேயே தங்குகிறவனாகவே காணப்பட்டான். ஐசுவரியத்தின் மேலேயே அவனது கண்கள் நிலைகொண்டிருந்தது. 'நீ ஊருக்குப் போ' என்று தேவன் அவனிடத்தில் சொன்னபோதும், 'தகப்பனின் ஆசீர்வாத்தின்படி தனக்கு இரண்டு பங்கு கிடைக்கும்' என்பதையே நினைத்துக்கொண்டிருக்கிறவனாகக் காணப்பட்டான். எனவே தேவன், 'ஏசா வருகின்றான்' என்று சொல்லுகின்றார். தேவனை முகமுகமாய்த் தரிசிப்பதற்கு இப்படிப்பட்ட நிலையை தேவனே ஏற்படுத்துகின்றார்.

எல்லா மந்தைகளையும் பரிவாரங்களையும் யாக்கோபு அனுப்பிவிட்டு அவனோ பிந்தி தனித்திருந்தான். முன்னால் செல்வதற்கு பயமுள்ளவனாயிருந்த யாக்கோபு, தேவனை முகமுகமாய்த் தரிசித்ததற்குப் பின்பு வீரமுடன் செல்லுகின்றான். ஏசாவை தேவன் கொண்டுவந்ததின் நோக்கம், யாக்கோபு தனது தவறுகளை அறிக்கை செய்யவே. ஏசா வருகின்றான் என்று அறிந்தவுடன், யாக்கோபு தேவனை நோக்கி, **'அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன். இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்'** (ஆதி 32:10) என்று **அறிக்கையிடுகின்றான்.** ஏசா வரும்போது மாத்திரமே நாம் யார் என்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும். தன்னுடைய பெலத்தினாலேயே அத்தனை ஐசுவரியங்களையும்

சம்பாதித்தேன் என்று எண்ணிக்கொண்டிருந்த யாக்போபு, ஏசா வருகின்றான் என்பதைக் கேள்விப்பட்டபோதோ, ஆண்டவரே எல்லாம் உம்மால் வந்தது என்று சொல்லுகின்றான். இடுக்கமான சூழ்நிலைகளை தேவன் நம்முடைய வாழ்வில் அனுமதிப்பது, நம்மை அழிப்பதற்கல்ல, நம்மை சுத்திகரிக்கவே. தேவனைக் காண, அவரது மகிமையையும் மாட்சிமையையும் காண, துன்பத்தைக் கண்டு சவால்விடுகிறவனாக நாம் மாறவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளை தேவன் நமது வாழ்வில் அனுமதிக்கின்றார்.

நாம் ஏழையாக இருந்தாலோ, ஐசுவரியம் இல்லாதவர்களாக இருந்தாலோ, இரண்டு கண்கள் இல்லாமல் இருந்தாலோ, கால்கள் இல்லாதிருந்தாலோ பரலோகம் சென்றுவிடலாம், ஆனால், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிப்பதில்லை. தேவனைக் காண்பதினாலேயே பரிசுத்தம் நம்மிடத்தில் உருவாகத் தொடங்குகின்றது. துன்பங்கள் மலையைப்போல வந்தாலும், அதனைப் பனியைப்போல தேவன் விலகப்பண்ணுகின்றார். நம்முடைய வாழ்வில் தேவன் எத்தனை நல்லவர் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். தேவனின் தரிசனம் நம்மை சுத்திகரிக்க வல்லமையுள்ளது. யாக்கோபை இஸ்ரவேலாக மாற்றியபின்னரே அவனது வாழ்க்கை பயமில்லாததாயிருந்தது. தேவன் என்னோடு இருக்கின்றார் என்ற உணர்வு அவனுக்குள் மேலோங்கியிருந்தது. சூழ்நிலைகள் அவனைக் கலங்கடிக்க இயலவில்லை. வெற்றியுள்ள வாழ்விற்கு சுத்திகரிப்பு முதன்மையானது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

புத்தியைத் தெளிவிக்கும் தேவன்

> பின்பு கர்த்தருடைய தூதனானவர் மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் காணப்படவில்லை. அப்பொழுது அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறிந்து, தன் மனைவியைப் பார்த்து: நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம் என்றான். நியா 13:21,22

மனோவாவின் மனைவி மலடியாயிருந்தாள், அவள் ஒருநாள் வயல்வெளியில் இருக்கும்போது தேவதூதனானவர் அவளுக்கு வெளிப்பட்டு, ‘நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவன் நசரேய விரதமுடையவனாக இருப்பான்’ என்று சொன்னதுடன், அவனுக்கு என்ன பெயரிடவேண்டும், எப்படி வளர்க்கவேண்டும் என்பதையும் அவளுக்கு அறிவித்தான். அவள் வீட்டிற்கு ஓடிவந்து ‘நமக்கு ஒரு குமாரன் பிறக்கப்போகிறான்’ என்று சொன்னபோது, மனோவாவினால் அந்த தரிசனத்தையும், அவளது வார்த்தைகளையும் நம்பமுடியவில்லை, தன் மனைவியின் வார்த்தைகளை சந்தேகப்படுகின்றவனாகவே காணப்பட்டான். சில நேரத்தில் தேவன் குடும்பங்களில் பெண்களைக்கொண்டு பேசுகின்றார் என்பதை இந்த சம்பவத்தின் வாயிலாக நாம் அறிந்துகொள்ளமுடியும். விசுவாசத்தில் குறைவுள்ளவனாயிருந்தபோதிலும், மனோவாவின் விண்ணப்பத்தைக் கேட்டு தேவன் அவளுக்கு மறுபடியும் தரிசனமானார்; ஆனாலும், மனோவாவிற்கு அவர் தரிசனமாகவில்லை. குடும்பங்களில் ஏற்படுகின்ற சந்தேகத்தினால், இன்று அநேக குடும்பங்கள் உடைந்துபோய்விட்டன. அப்பொழுது மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: ஆ, என் ஆண்டவரே, நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன் மறுபடியும் ஒருவிசை எங்களிடத்தில் வந்து, பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பாராக என்று வேண்டிக்கொண்டான் (நியா 13:8). மனோவா தேவனை நோக்கி விண்ணப்பஞ் செய்தபோதிலும்கூட, தேவதூதன் மீண்டும் அவனது மனைவிக்கே தன்னை வெளிப்படுத்துகின்றார் (நியா 13:9). குமாரன் பிறப்பான் என்று தேவதூதன் சொன்னபோதிலும், மனோவா மனைவியை நோக்கி, ‘நாம் தேவனைக் கண்டோம் சாகவே சாவோம்’ என்றே கூறுகின்றான். என்றபோதிலும், ‘கர்த்தர் நம்மைக் கொன்றுபோடச் சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும்

ஒப்புக்கொள்ளமாட்டார். இவைகளையெல்லாம் நமக்குக் காண்பிக்கவுமாட்டார், இவைகளை நமக்கு அறிவிக்கவுமாட்டார்' என்று மனோவாவின் மனைவி அவனது புத்தியைத் தெளிவிக்கின்றாள். தேவன் நமக்குத் தரிசனமாவது நம்மைக் கொல்வதற்கல்ல, நம்மை உபயோகப்படுத்தவே. தேவ தாசிசனம் நமது புத்தியைத் தெளிவிப்பது மாத்திரமல்லாமல் நம்மை விசுவாசத்தில் பெலப்படுத்தவும் வல்லமையுடையது.

தேவன் எனக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் இன்னமும் நிறைவேறவில்லையே, எனது வாழ்க்கையும், ஊழியமும் முடிவுக்கு வந்துவிட்டதே என்று நாம் எண்ணிக்கொண்டிருப்போமென்றால், தேவன் வாக்குக்கொடுத்திருப்பது நம்மைக் கொல்லுவதற்கல்ல என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நமக்கு தேவன் வாக்குக் கொடுத்திருப்பாரென்றால் அதை நிச்சயம் அவர் நிறைவேற்றுவார்; இதில் சந்தேகமில்லை. நமக்குச் சொன்னதைச் செய்து முடிக்கும்வரை தேவன் நம்மை கைவிடுகிறதில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். தேவன் நம்முடைய வாழ்க்கையில் வைத்திருக்கின்ற நோக்கத்தையும், திட்டத்தையும் நாம் அறியவேண்டுமென்றால், நாம் நம்மை அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். ஒப்புக்கொடுத்தோருக்கே தேவன் தனது திட்டங்களை வெளிப்படுத்துகின்றார். 'நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்' என்று நாம் கேட்காதவரை அவர் தனது சித்தத்தை வெளிப்படுத்துவதில்லை.

நம்முடைய வாழ்வில் ஏற்படும் சிக்கலான நேரங்கள், துன்ப வேளைகள் மட்டும் நெருக்கங்களில் நாம் சோர்ந்துபோகாமல், தேவமகிமையைக் காண காத்திருப்போமென்றால் தேவன் நமக்கு தன்னை வெளிப்படுத்துவார். தேவனது வல்லமை நம்மை தொடர்ந்து ஓட பெலமுள்ளதாக மாற்றும். தேவ தரிசனம் நம்மை பரிசுத்தமாக்குவதோடு மாத்திரமல்ல, நமது புத்தியையும் தெளிவிக்கும். நமது தேசத்தில், சபைகளில் நம்மைக்கொண்டு தேவன் செய்ய நினைத்திருக்கின்ற திட்டங்களை தேவன் நிறைவேற்ற ஏக்கமுடையவர்களாக நாம் காணப்படுவோமென்றால், தேவ சித்தம் நம்முடைய வாழ்வில் பரிபூரணமாக நிறைவேறும். அழிந்துகொண்டிருக்கின்ற ஆத்துமாக்களை அவரண்டை கொண்டுவந்து சேர்க்கும் மாபெரும் பணியில் நமக்கு இருக்கும் பங்கினை அறிந்து நம்மை அவரது கரங்களில் அர்ப்பணிப்போமென்றால், ஆத்துமாக்கள் பல தேவனண்டை சேரும். தேவ ராஜ்யம் இப்பூவுலகில் பரவ தேவனுக்கு நம்மை அர்ப்பணிப்போம்.